# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## O.S. NO. 124/2020

**21.12.2023 - பி.வா.சா. 2 தேவி சத்திய பிரமாணத்தின் பேரில்  வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய சொந்த ஊர் நாரையூர் கிராமம்.  எனக்கு திருமணமாகி 30 வருடங்கள் ஆகிறது.  எனக்கு திருமணம் ஆகும் போது 17 வயது.  திருமணத்திற்கு முன்பு வாதியின் குடும்பத்தை பற்றி தெரியாது.  வெள்ளைய கவுண்டரும், அவருடைய பிள்ளைகளும் பாகம் பிரித்துக் கொண்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல.  பாகம் எழுதும் போது நான் உடன் சென்றேன்.  பாகப் பத்திரம் சர்வேயரை வைத்து எழுதினார்கள்.  திருவண்ணாமலையில் வைத்து எழுதினார்கள்.  சொத்தை 5 பேரும் சமமாக பிரித்துக் கொண்டார்கள்.

என் கணவர் பழனிக்கு எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் அதனை பற்றி எனக்கு தெரியாது.  என் கணவருக்கு பட்டா கொடுத்த விவரம் எனக்கு தெரியும்.  அந்த பட்டா தவறாக வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.  2009ல் என் கணவர் எனக்கு தான செட்டில்மெண்ட் கொடுக்கப்பட்ட சொத்தை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.  நான் சொல்வது போல் பாகப்பத்திரம் ஏற்படுத்தப்படவில்லை என்றும், அந்த பாகப் பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல.  அந்த பாகப் பத்திரத்தின் அடிப்படையில் யாரும் எந்த சொத்தையும் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல.  வெள்ளைய கவுண்டரின் சொத்துக்களை அனைவரும் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

வெள்ளைய கவுண்டரில் இரண்டு பெண்களுக்கும் எனக்கு திருமணம் ஆவதற்கு 5 - 6 ஆண்டுகளுக்கு முன்பே அவர்களுக்கு திருமணம் ஆகி விட்டது.  வழக்கு விவரங்கள் எனக்கு தெரியாது என்றும், தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- தேவி

Taken down by me in Open Court read over to the witness and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional  District Judge,
Tiruvannamalai.